பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

21 05 2025 12 40

புதன்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. முழு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக மிசோரம் அறிவிக்கப்பட்டிருப்பது, அனைத்து மாநிலங்கள் யூனியன்பிரதேசங்களின் கல்விச் செயல்பாட்டை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது என்று மத்திய அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

2. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையானது நாட்டில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை நிலைநிறுத்தியுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. தொற்றா நோய்களை கட்டுப்படுத்துவதில் இந்திய அளவில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்வதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்

4. இஸ்ரேல் உடனான வர்த்தகப் பேச்சுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

5. மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **H.S.** பிரனாய் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

மிசோரம் முழு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐஸ்வாலில் மத்திய கல்வித்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அம்மாநில முதலமைச்சர் திரு. **Lalduhoma** இதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.

மிசோரமின் இந்த சாதனை நாட்டை பெருமிதப்படுத்தும் தருணங்களில் ஒன்று என மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

தமது சமூக வலைதளப் பக்கத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ள அவர், மிசோரம் அரசு மற்றும் அம்மாநில மக்களின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி இது என கூறியுள்ளார்.

மிசோரமின் இந்த சாதனையானது வளர்ச்சியடைந்த இந்தியா எனும் இலக்கை நோக்கி பயணிக்கும் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது என்று திரு. தர்மேந்திரபிரதான் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து உலக நாடுகளிடம் எடுத்துக் கூறுவதற்காக அமைக்கப்பட்டுள்ள அனைத்துக் கட்சிக் குழுவின் முதலாவது அணி இன்று புறப்பட்டுச் சென்றது.

ஐக்கிய ஜனதாதளத்தைச் சேர்ந்த திரு. சஞ்சய் குமார் ஜா தலைமையிலான இந்த குழுவினர், இந்தோனேஷியா, மலேசியா, தென்கொரியா, ஜப்பான் நாடுகளுக்கு சென்று ஆபரேஷன் சிந்தூர் குறித்து விளக்கம் அளிக்க உள்ளது.

இந்தப் பயணத்திற்கு முன்பாக புதுதில்லியில் செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய திரு. சஞ்சய் குமார் ஜா, பாகிஸ்தான் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு ஊக்கமளித்து வருவதை தமது தலைமையிலான குழுவினர் உலக நாடுகளுக்கு எடுத்துரைக்க இருப்பதாக தெரிவித்தார்.

மேலும் சிவசேனா நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையிலான மற்றொரு குழுவும் ஐக்கிய அரபு அமீரகம், லைபீரியா, காங்கோ மற்றும் சியரா லியோன் நாடுகளுக்கு இன்று புறப்பட்டுச் செல்கிறது.

<<<<>>>>

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் நினைவு தினத்தையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி அன்னாருக்கு மரியதை செலுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்துவதாகக் கூறியுள்ளார்.

இதனையொட்டி புதுதில்லியில் உள்ள ராஜீவ் காந்தியின் நினைவிடத்தில் காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு. ராகுல் காந்தி உள்ளிட்ட தலைவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜீவ்காந்தி நினைவிடத்தில் தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வப்பெருந்தகை உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

இந்நாள் தேசிய தீவிரவாத எதிர்ப்பு தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்நாளையொட்டி தீவிரவாதம் மற்றும் வன்முறைக்கு எதிரான நமது நிலைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின்கீழ் நமது பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையானது நாட்டின் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை நிலைநிறுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தேசிய தீவிரவாத எதிர்ப்பு தினத்தை ஒட்டி, நாடு முழுவதும் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் தீவிரவாத எதிர்ப்பு உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

சென்னை அகில இந்திய வானொலி நிலைய வளாகத்தில் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தீவிரவாத எதிர்ப்பு உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

<<<<>>>>

அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் மேம்படுத்தப்பட்டுள்ள 103 ரயில் நிலையங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை திறந்து வைக்கிறார்.

இத்திட்டத்தின்கீழ் தெற்கு ரயில்வே சார்பில் தமிழகத்தில் 9 ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

திருவண்ணாமலை ரயில் நிலையம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள சாமல்பட்டி ரயில் நிலையம் சுமார் 8 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

<<<<>>>>

இனி...

ஆபரேஷன் சிந்தூரின் வெற்றியை கொண்டாடும் வகையில் சாதனை படைத்த பாதுகாப்புப்படையினரின் சிறப்பை போற்றும் வகையிலான செய்தித்தொகுப்பு...

இதில் இன்று இடம்பெறுகிறது பரம்வீர் சக்ரா **Hoshiar Singh-**கின் வீர தீர சாதனைகள்.

---------------

தொற்றா நோய்களை கட்டுப்படுத்துவதில் இந்திய அளவில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்வதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்சில் நடைபெற்ற மனநலம் தொடர்பான சர்வதேச மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய அவர், சுகாதார மேம்பாட்டிற்காக மக்களைத் தேடி மருத்துவம் உட்பட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகக் கூறியுள்ளார்.

இளையதலைமுறையினர் தமது உடல் மற்றும் மனநலத்தைக் காக்கும் வகையில் தினமும் நடைபயிற்சி மற்றும் ஓட்டப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் நகைக் கடன் வழங்குவது தொடர்பாக ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள புதிய வரைவு விதிகள் ஏழை மற்றும் நடுத்தர மக்களை கடுமையாக பாதிக்கும் என்று பாமக நிறுவன தலைவர் மருத்துவர் ராமதாசு தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இஸ்ரேல் உடனான வர்த்தகப் பேச்சுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிம் பேசிய அந்நாட்டு வெளியறவு அமைச்சர் திரு. டேவிட் லாமி, காஸாவுக்கு செல்லும் மனிதநேய உதவிகளை இஸ்ரேல் தடுத்து நிறுத்துவது நியாயமற்றது என்றும், மனிதாபிமான ரீதியில் அது நெருக்கடியை ஏற்படுத்தும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் காஸாவை சுத்தப்படுத்துவோம் என்ற இஸ்ரேல் அமைச்சர் ஒருவரின் கருத்துக்கு டேவிட் லாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **H.S.** பிரனாய் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

கோலாலம்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 19-21, 21-17, 21-16 என்ற செட் கணக்கில் ஜப்பானின் **Kenta Nishimoto**-ஐ வென்றார்.

இப்போட்டியில் சதீஷ் கருணாகரன், ஆயுஷ் ஷெட்டி ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மும்பை அணி – தில்லி அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>